1974 சனவரி 23]

பரிசுப் பொருள்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை

* **96 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு Gift Goods (Unlawful Possession) Act ன் கீழ் எத்தனை நபர்கள் பேரில் நடவடிக்கை கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) 1973 பிப்ரவரியில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில் பட்டியில் அமெரிக்க சோயாபீன் எண்ணெ டின்கள் 2,742-ஐ சட்ட விரோதமாக வைத்திருந்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் மேல் காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இவ்விதப் பொருள்கள் பெரும் பாலும் மதிய உணவுத் திட்டத்திற்காக வரக்கூடிய பொருள்கள். அப்படி வந்த பொருள்கள் இவ்வாறு துர்விநியோகம் செய்யப்பட்டிருக்கிறதா ? எவ்விதம் இவர்களுக்கு இது கிடைத்தது ? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு கிஃப்ட்ஸ் கூட்ஸ் அன்லாஃபுல் பொசஷன் ஆக்ட் 1961படி நன்கொடையாக வரக்கூடிய பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பொறுத்தவரை எங்கிருந்து பெற்றார் என்று விசாரித்ததில் கேரளத்தைச் சேர்ந்த திருவனந்தபுரம் செல்லப்பிள்ளை என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கியதாக கோயில் பட்டியைச் சேர்ந்த திரு. குருசாமி நாடார் குறிப்பிட்டிருக்கிறார். கேரளத்தை இதுபற்றிக் கேட்ட நேரத்தில் அவை கொச்சி துறைமுகத்தில் வந்து இறங்கவில்லை, வேறு வகையில் வந்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அது எப்படி இறக்குமதி ஆகியது என்ற விவரங்களை எல்லாம் காவல் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. குருசாமி நாடார் கைது செய்யப்பட்டு பெயிலில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

திரு. முனு ஆதி : இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க யூனியன் அளவில் சமையற்கூடங்களை ஏற்பாடு செய்து பள்ளிக் கூடங்களுக்கு விநியோகம் செய்யும் திட்டத்தை அமல்படுத்தினர்களே, அதை தமிழ்நாடு பூராவும் விரிவுபடுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா ? அல்லது குறிப்பிட்ட இடங்களில் மட்டும் வைத்து அதை நடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறுர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இப்படிப்பட்ட பொருள்களை நேரடியாகக் கொடுக்காத அளவிற்கு சென்ட்ரல் கிச்சன் மையச் சமையற்கூடங்கள் வழி கொடுப்பதற்கு செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு இவை முடிந்து மற்ற மாவட்டங்களில் மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறுர்கள். இதுவரையில் 95, 96-க்கு மேற்பட்ட அத்தகைய சமையற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 374 ஒன்றியங்களிலும் இந்த முறையை நிறைவேற்றுகிற அளவிற்கு நாம் கேர் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறேம். படிப்படியாக இந்த எண்ணம் நிறைவேறும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 'கிஃப்ட் குட்ஸ்' என்ற தலைப்பில் வெளி ராஜ்யங்களிலிருந்து சர்ச்சஸ், சோஷல் சர்வீஸ் செய்கிற நிறுவனங்கள் போன்றவற்றிற்கு இவற்றையெல்லாம் கொடுக்கிறுர்கள். அங்கு அது குறிப்பிட்ட சில காரியங்களுக்காகக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுப்பதை பாபரிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 'கேர்' நிறுவனம் அதிகமாகக் கொடுக்கிறது. யுனிசெப் நிறுவனம், கிறித்துவப் பணி நிறுவனம், லூதரின் பணி நிறுவனம், கத்தோலிக்க உதவி நிறுவனம் இவைகளும் கொடுக்கின்றன. அவற்றை கல்வித் துறை சார்பாக கோடவுனில் வைத்து வழங்குகிற உரிமையைக் கேட்டுப் பெற்றிருக்கிறேம். மைய சமையற்கூடங்கள் மேலும் வரும் போது—முன்பு நடந்த அவ்வளவு தவறுகள் இப்போது இல்லை—எல்லா ஒன்றியப் பகுதிகளிலும் இந்த முறை ஏற்பட்டால் இதில் அதிகம் தவறு ஏற்பட வழியிருக்காது.

1974 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ). தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.